பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 14 புதன்கிழமை 27.05.2020 கதிர் 71

## 3 இலங்கையர் குவைத்தில் உயிரிழப்பு

குவைத்தில் தொழில் புரிந்து வந்த மூன்று இலங்கையர்கள் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

2





# வடமராட்சியில் வெடிப்பு; பொலிஸ் அதிகாரி காயம்!

## விசேட அதிரடிப் படையினர் குவிப்பு; சுற்றிவளைப்புத் தேடுதல்கள் தீவிரம்

யாழ்ப்பாணம், மே 27

வடமராட்சியில் இன்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தின்போது பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

2

## ராஜிதவுக்கு மே 10 வரை விளக்கமறியல்!

கொழும்பு, மே 27

முன்னாள் அமைச்சர் ராஜித சேனரத்னவை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே இன்று உத்தரவிட்டார்.

மேலும் பிணை மனு தொடர்பான தீர்மானம் அன்றைய தினமே அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலின்போது சர்ச்சைக்குரிய வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு எங்கும் ராணுவப் பிரசன்னம்!

### பெரும் சிரமத்தில் மக்கள்

முல்லைத்தீவு, மே 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகள் காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட ஆரம்பித்த காலம் முதல் இராணுவத்தினர் வீதிகள் எங்கும் சோதனை சாவடிகளை அமைத்து வந்தனர்.

வேறு எந்த மாவட்டத்திலும் அல்லது வேறு எந்த இடத்திலும் இல்லாத அளவுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான இராணுவச் சோதனைச் சாவடிகள் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டமையால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்

2

## வடமராட்சி கிழக்கில் 2 இளைஞர்கள் கைது

### மூன்று வாகனங்களில் சென்ற பொலிஸார் நடத்திய தேடுதலின்போது

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று முற்பகல் மூன்று வாகனங்களில் அங்கு சென்ற பொலிஸார் பரவலாகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையிலேயே இந்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், அவர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

இந்த இளைஞர்கள் அண்மையில் குடத்தனையில் பொலிஸாரும் மக்களும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக்கொண்ட முறுகல் சம்பவம் இடம்பெற்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

## மலையகம் எங்கும் சோகமயம்



கொழும்பு, மே 27

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமாகிய ஆறுமுகம் தொண்டமானின் திடீர் மறைவினால் மலையகமெங்கும் சோகமயமாகக் காட்சியளிக்கின்றது.

தோட்டங்கள் அனைத்தும் வேலை நிறுத்தம் செய்யப்பட்டு ஆங்காங்கே கட்சி வேறுபாடின்றி அமரர் தொண்டமானின் உருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

தொண்டமானின் மறைவை ஈடு செய்ய முடியாத இழப்பாக கருதி ஆதரவாளர்கள் கண்ணீர் மல்கி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

2

## தேர்தல் மனுக்கள் பரிசீலனை நேற்று மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 28

ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தல் அறிவிப்பு மற்றும் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பு ஆகிய வர்த்தமானிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களின் பரிசீலனை நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி முதல் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள இந்த மனு, 7ஆவது நாளாக இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் புவனேக அலுவிகாரே, சிசிர டி அப்ரூ, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்று மாலை வரையான விசாரணைக்குப் பின்னர் அது ஒத்தி வைக்கப்பட்டது.

## ஆறுமுகன் மறைவுக்கு எடப்பாடியும் இரங்கல்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் மறைவு அந்நாட்டு மக்களுக்குப் பேரிழப்பாகும் என தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் மறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆறுமுகன் தொண்டமான் காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். இந்திய வம்சாவளி சமூகத்தின் செல்வாக்கு மிக்க தலைவராக

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 3 இலங்கையர் குவைத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவைத் - ஸ்ரீலங்கா ஒன்றியத்தின் இணைப்பாளரான நிசாந்த சஞ்சீவ மடபாத்த இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பர்வானியா, அஹமதி, ஹவாலி, ஜஹாரா மற்றும் குவைட் ஆகிய நகரங்களில் தொழில்புரிந்து வரும் இலங்கையர்கள் பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் பலர் சட்டவிரோதமான முறையில் குவைத்தில் தங்கியிருக்கின்றனர் என்று கூறும் அவர், வீசா வைத்துக்கொண்டு குவைத் நாட்டில் தொழில் புரிந்து வரும் இலங்கையர்கள் பலர் வாடகை வாகன சாரதிகளாகத் தொழில் புரிந்து வருகின்ற நிலையில், இவர்களில் பலருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றார்.

## குணமடைவு 732 பேர்; சிகிச்சையில் 577 பேர்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 20 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 712 இலிருந்து 732 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று கொரோனா வைரஸ் தொற்றுடன் 137 பேர் அடையாளம் காணப்பட்டனர். இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளில் ஒரே நாளில் மிக அதிகளவானோர் நேற்றே அடையாளம் காணப்பட்டனர். இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி ஆகக் கூடுதலாக 65 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

நேற்று அடையாளம் காணப்பட்ட 137 பேரில், குவைத்திலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்ட 127 பேர் அடங்குகின்றனர். ஏனைய 10 பேரும் கடற்படையினர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## வடமராட்சியில் வெடிப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அருகிலுள்ள முச்சந்தியில் காலை 7 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்தில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரப்படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு சுற்றிவளைப்புத் தேடுதல்களும், சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சட்டவிரோத மணல் அகழ்வுகள், மணல் கடத்தல்களைத் தடுக்கும் நோக்குடன் அந்தப் பகுதியில் பொலிஸார் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டு வருவதுடன், அந்தச் சந்திப் பகுதியில் நின்று வீதிச் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவது வழமையாகும்.

இந்தநிலையில், இன்று காலை 7 மணியளவில் வழமையான வீதிச் சோதனை நடவடிக்கைக்காக அந்தச் சந்திப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் பொலிஸார் வந்திறங்கியபோது, நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் ஒன்று திடீரென வெடித்துள்ளது. இதன்போது பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் சந்தேகத்துக்கு இடமான முறையில் சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரும், இராணுவத்தினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சி.4 ரக வெடிமருந்து, சைக்கிள் போல்ஸ், டெடனேட்டர், பற்றரிகள், நீர் விநியோகத்துக்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் குழாய், அதற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் மூடி ஆகியவற்றைப் பயன்படுத்தி உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடிபொருளே வெடித்துள்ளது என ஆரம்பக் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸ் தகவல்கள் ஊடாக அறியமுடிந்தது.

சட்டவிரோத மணல் அகழ்வோர் பொலிஸாரை இலக்குவைத்து அந்த வெடிபொருளை அவ்விடத்தில் புதைத்து வைத்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.


எனினும், சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னரே முழுமையான தகவல்களை வழங்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



## தொண்டாவுக்கு சம்பந்தன் நேரில் அஞ்சலி செலுத்தல்!

மலையக மக்களின் உரிமைக்காக - விடுதலைக்காக இறுதிவரை குரல் கொடுத்து திடீரென மரணித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகம் தொண்டமானின் பூதவுடலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இன்று நேரில் அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை, அமரர் ஆறுமுகம் தொண்டமானுக்கு இரா.சம்பந்தன் இரங்கல் செய்தியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இன்று வெளியிட்டுள்ளார்.



## கடற்படை தொற்று 638 ஆக அதிகரிப்பு

கொழும்பு, மே 27

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட கடற்படையினரின் எண்ணிக்கை 638 ஆக அதிகரித்துள்ளது. நேற்று 10 கடற்படையினர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 12 கடற்படையினர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து இன்று வெளியேறியுள்ளனர்.

இதன்படி, குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 344 ஆக உயர்வடைந்துள்ளது எனக் கடற்படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

294 கடற்படையினர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் 20 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை பொது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கடற்படை ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## நாடு திரும்பி வந்தவர்களில் 288 பேருக்குக் 'கொரோனா'

கொழும்பு, மே 27

கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பி தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தடுத்துவைப்பட்டவர்களில் இதுவரை 288 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு இன்று பிற்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அவர்களில் 217 பேர் குவைத்திலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆறுமுகன் மறைவுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தவர் மட்டுமின்றி தமிழ் மக்களின் நலனுக்காக பணியாற்றியவர் என்ற பெருமைக்குரியவர்.

ஆறுமுகன் தொண்டமானின் மறைவு இலங்கைக்கு பேரிழப்பு. அவரது குடும்பத்தினருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

## மலையகம் எங்கும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத்தின் அனைத்து நகரங்களிலும் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளமையுடன் வாகனங்கள்,வர்த்தக நிலையங்கள்,வீடுகள்,வீதிகள் எங்கும் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

சகல தொழிற்சங்கங்களினதும் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

## முல்லைத்தீவு எங்கும் ராணுவப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக ஊரடங்கு வேளையிலும் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களிலும் இரவு வேளைகளிலும் மிக அதிகமாக இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு மக்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றமையுடன் விவரங்களும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலைமை மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவின் ஏ - 9 பிரதான வீதியில் மாங்குளம் பகுதியில் இரண்டு கிலோ மீற்றர் பகுதிக்குள் சுமார் மூன்று சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மாங்குளம் 574 ஆவது படைப் பிரிவு இருக்கும் இடத்துக்கு முன்பாக ஒரு ராணுவச் சோதனைச் சாவடி அமைக் கப்பட்டுள்ளதுடன் மாங்குளம் நகர்ப் பகுதியில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்குள் மேலும் ஒரு இராணுவச் சோதனைச் சாவடியும் ஒரு பொலிஸ் சோதனைச் சாவடியும் என மூன்று சோதனைச் சாவடிகள் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்குள் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்று இடங்களிலும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனைகளும் இடம்பெறுகின்றன. .

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக போக்குவரத்துகளில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்திருந்த அரசு இவ்வாறு இரண்டு கிலோமீற்றர் பகுதிக்குள் 3 சோதனைச் சாவடிகள் அமைக்கவேண்டிய தேவை என்ன எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது

அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு இடையிலான சுமார் 18 கிலோ மீற்றர் தூரத்துக்குள் ஏழு சோதனை சாவடிகளைக் கடக்கவேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேபோன்று முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் றெட்பானா பகுதியில் ஒரு சோதனைச் சாவடியும் நெத்தலியாறு பாலத்தில் ஒரு சோதனைச் சாவடி என முல்லைத்தீவு பரந்தன் - வீதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்பது சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று முல்லைத்தீவு - கொக்கிளாய் வீதியில் சிலாவத்தைப் பகுதியில் ஒரு சோதனைச் சாவடியும் வேம்படிச்சந்தியில் இன்னுமொரு சோதனைச் சாவடியும் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதியில் கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் ஒரு சோதனைச் சாவடியும் கருவேலங்கண்டல் பகுதியில் ஒரு சோதனைச்சாவடியும் முள்ளியவளை தேக்கங்காட்டுப் பகுதியில் ஒரு சோதனைச் சாவடியும் வற்றாப்பளைச் சந்தியில் ஒரு சோதனைச் சாவடியும் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னாகண்டல் பகுதியில் ஒரு சோதனைச் சாவடி, ஒட்டறுத்தக்குளம் சந்திப் பகுதியில் ஒரு சோதனைச் சாவடி, துணுக்காய் நகர் பகுதியில் ஒரு சோதனைச் சாவடி என மாவட்டம் முழுவதும் சோதனைச் சாவடிகள் அடுக்கிவிடப்பட்டுள்ளன.

இவ்வாறு வேறெங்கும் இல்லாதவாறு ஒரு குறுகிய ஒரு மாவட்டத்தில் மாத்திரம் இவ்வாறு பல சோதனைச் சாவடிகள் அமைக்கவேண்டிய தேவை என்ன என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மலையக விருட்சம் சரிந்தது

மலையகத் தமிழ் மக்களைத் தாங்கி நின்ற ஒரு பெரு விருட்சம் நேரத்துடன் சரிந்து விட்டது.

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை இது எதிர்பாராத அதிர்ச்சி.

தமது இனத்தின் இருப்புக்காகவும், வாழ்வுக்காகவும், மேம்பாட்டுக்காகவும், தமது தனித்துவம் பேணுவதற்காகவும் உழைக்கும் வர்க்கமான நம் மலையகத் தமிழ்ச் சகோதரர்கள் கொடுத்த விலை அளப்பரியது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட்டமையை அடுத்து இலங்கையின் நாடாளுமன்றம் பௌத்த, சிங்கள பெரும்பான்மைக் கொடுங்கோன்மையின் மையத்தளமாயிற்று. அங்கு இனவாதம் அரசோச்சியது. மேலாண்மை வாதம் கோலோச்சியது. சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்கள் அங்கு அநாயசமாக யாக்கப்பட்டன.

இந்த இனவாதத் தாக்குதலில் முதல் களப் பலியாகி வீழ்ந்தவர்கள் மலையகத் தமிழர்களான தோட்டத் தொழிலாளர்களே.

இந்த இலங்கைத் தீவின் பொருளாதார விருத்திக்காகவும், தேசிய சுபீட்சத்துக்காகவும் தமது இரத்தத்தையும், வியர்வையையும் கொட்டி ஒரு நூற்றாண்டுக்கு மேல் உழைத்த பத்து லட்சம் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்து நாடற்றவர்களாக நிர்கதி நிலையில் விட்டது பௌத்த, சிங்களப் பேரினவாதம். அவர்களின் சிவில் மற்றும் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. 'நாடற்றவர்கள்' என்ற இழி நிலையில், அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டு பேரவலப்படும் கொடூரத்துக்கு அவர்களைத் தள்ளியது ஈவு இரக்கமேயற்ற தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதம்.

பத்து லட்சத்துக்கும் அதிக எண்ணிக்கை கொண்ட இந்த மண்ணின் சுதேசிகள் ஒரே நாளில் விதேசிகளாக்கப்பட்டார்கள்.

இந்த அநாகரிகமான – கொடூர – மிக மோசமான – நடவடிக்கை ஏற்கனவே பின்தங்கி, சுருண்டு போய்க் கிடந்த மலையகத் தொழிலாளர் வர்க்கத்தை மேலும் அவல நிலைக்குத் தள்ளியது. வாக்களிக்கும் உரிமை மட்டுமன்றி, அரச துறைகளிலோ, தனியார் துறைகளிலோ வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டது. நிலம் வாங்கும் உரிமை, வர்த்தகம் செய்யும் உரிமை எல்லாம் மறுக்கப்பட்ட ஒரு முதன்மையான பட்டாளி வர்க்கத்தை அவல நிலையிலிருந்து மீட்டெடுக்கும் தந்திரோபாயத்துடன் அவர்களின் தலைவர்கள் சாணக்கியமாகச் செயற்பட்டனர்.

அத்தகைய சாணக்கிய விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர்களுள் முதன்மையானவர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

பேரினவாதிகளின் கொடூரத்தால் – இழிந்த நடவடிக்கைகளால் – அடக்குமுறைச் செயற்பாடுகளினால் – தமது மக்கள் பேரவலப்பட்டாலும், அந்தப் பேரினவாதிகளுக்கு மத்தியில் வாழ்ந்து, மேலெழுந்து, மேம்படுவவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்ற யதார்த்ததைப் புரிந்து கொண்ட சௌமியமூர்த்தி தொண்டமான், ஒரு புறம் மிதமான சகிப்பும் தன்மையோடும், மறுபுறம் அரசியல் ரீதியாகக் கொதித்தெழும் சீற்றத்துடனும் இரட்டை அணுகுமுறை அரசியல் தந்திர வலையை விரித்தார். அதில் சிங்கள ஆட்சிப் பீடங்களை விழ வைத்ததன் மூலம் தமது மக்களின் நலனைப் பேணி, அவர்கள் வாழ்வில் உயர்வதற்கான மார்க்கத்தைக் காட்டினார் அவர்.

அவரின் அதே தந்திரோபாயத்தையும், சாணக்கியத்தையும் பின் நாள்களில் கட்டவிழ்ந்த புதிய அரசியல் செல்நெறிகளுக்கு அமைய மாற்றியமைத்து, புதிய அணுகுமுறையுடன் வெற்றிகரமாக அரசியல் பாதை வகுத்தார் ஆறுமுகன் தொண்டமான்.

தனது மக்களை எந்தப் பேரினவாதம் ஒரே நாளில் வாக்குரிமையைப் பறித்து நாடற்றதாக்கியதோ அதே பேரினவாதம், தனது மக்களுக்காகவும் தம் பின்னே அடங்கி வரும் வழியைத் தந்திரமாக ஏற்படுத்தினர் தாத்தா சௌமியமூர்த்தி தொண்டானும், பேரன் ஆறுமுகன் தொண்டமானும்.

நவீன அரசியலில் அதிலும் கூட ஒரு மாற்றம் ஏற்பட்டது. மாறி, மாறி ஆட்சிப் பீடம் ஏறும் பேரினவாதிகளிடமிருந்து தமது மக்களைப் பாதுகாத்துப் பேணி, அவர்களின் சமூக மேம்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக அத்தரப்புகளுடன் மாறி மாறி, முறைபோட்டு பங்காளிகளாக அணி சேர்ந்தன மலையகத் தமிழ்த் தலைமைகள்.

வெற்றிகரமான – சிலாகிக்கத்தக்க – இந்த புதிய மார்க்கத்தைத்தான் 'நானும் ஆறுமுகன் தொண்டமானும் ஒரே துப்பாக்கியின் இரட்டைக் குழல்கள்' என்று குறிப்பிட்டிருக்கின்றார் மனோ கணேசன்.

பேரினவாதச் சிங்களத்தை அரவணைத்துத்தான் அரசியல் செய்தாக வேண்டும். வேறு மார்க்கமில்லை என்ற கட்டாய யதார்த்தப் புற நிலையில் தம் சமூக மேம்பாட்டுக்காக அவர்கள் வகுத்துக் கொண்ட சாலச் சிறந்த உத்தி இது. தம் மக்கள் நலன் என்ற துப்பாக்கியின் குழல்களாயினர் அவர்தம் தலைவர்கள்.

சரி. அந்த இரட்டைக் குழலில் ஒரு குழல் அடைபட்டுப் போய் விட்டது. அதை இனித் திறக்கப் போகின்றவர் யார்? மகன் ஜீவன் தொண்டமானா அல்லது பெறாமகன் செந்தில் தொண்டமானா? அல்லது இரட்டைக் குழல் துப்பாக்கி இனி ஒற்றைக் குழலில் மட்டும்தான் கனலப் போகின்றதா?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# தொண்டமானுக்கு அஞ்சலி இறுதிக் கிரியை ஞாயிறன்று















கொழும்பு, மே 27

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர். ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் இன்று கொழும்பு, பத்தரமுல்லையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள், பொது மக்கள் என பலரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் பூதவுடல் நாளை வியாழக் கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனிலும் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் கொத்மலை, வேவண்டனிலுள்ள 'தொண்டமான் பங்களாவில்' மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்துக்கு பூதவுடல் எடுத்து செல்லப்படவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 31 ஆம் திகதி நோர்வூட் மைதானத்தில் பூரண அரச மரியாதையுடன் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹோட்டல்கள், திருமண மண்டபங்கள் யாழ்ப்பாணத்தில் கண்காணிக்கப்படும்

## கட்டுப்பாடுகளை மீறினால் நடவடிக்கை



யாழ்ப்பாணம், மே 27

உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்கள் திறப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனினும் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்படும் என்று மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஸ் சேனாரட்ன தெரிவித்தார்.

நாட்டில் கொவிட் - 19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக நாட்டில் இரண்டு மாதங்களாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு மீண்டும் நாடு படிப்படியாக வழமைக்குத் திரும்பிவந்தது. நேற்றில் இருந்து நாடு முழுவதும் கட்டுப்பாடுகளுடன் வழமைக்குத் திரும்பியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டமும் வழமைக்குத் திரும்பியுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இதனடிப்படையில் பலரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்கள் போன்றவை புதிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றிப் பொலிஸார் அறிவுறுத்தலுக்கு அமைய திறக்கப்பட்டு மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அனுமதி வழங்கியுள்ளோம்.

எனவே இந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்களுக்கு அமைய தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதாவது தமது நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் கட்டாயமாக முகக் கவசம் மற்றும் கையுறைகளையும் கட்டாயமாக அணிய வேண்டும்.

சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்றி சமூக இடைவெளியினையும் பேணியே பொது மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

இந்த நிறுவனங்கள் பொலிஸாரினால் கண்காணிக்கப்படும் போது எவராயினும் சுகாதார நடைமுறையினை பின்பற்றாத விடத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த எடுப்படும் - என்றார்.

ஏனைய மாவட்டங்களை போலவே எமது யாழ்ப்பாண மாவட்டத்திலும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு பொலிஸாரினால் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மக்களும் பொலிஸாருக்கு உரிய ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுகொண்டார்.

# கட்டாரிலிருந்து 268 பேர் இன்று தாயகம் திரும்பினர்






இன்று காலை டோஹாவில் இருந்து நான்கு குழந்தைகள் அடங்கலாக 268 இலங்கையர் நாட்டை வந்தடைந்தனர்.

திட்டமிட்டபடி இன்று காலை 5.45 மணியளவில் யு எல் 218 இலக்க விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

தொற்று நீக்கல் நடவடிக்கையின் பின்னர் அவர்கள் அனைவரும் இராணுவதினரால் பஸ்களில் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

## யாழில் முதலாவது கொரோனோத் தொற்றாளர் வீடு திரும்பினார்

யாழ்ப்பாணத்தில் கொரோனோ தொற்றுக்கு இலக்காகி முதலாவதாக அடையாளம் காணப்பட்ட நபர் சுமார் 65 நாள் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இத்தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புதிதாக கட்டட ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்வது தொடர்பாக சுவிஸ் நாட்டிலிருந்து வந்த மத போதகருடன் பழகிய தாவடி பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்கு இலக்கானார். அவர் குணமடைந்த நிலையில. இப்போது வீடு திரும்பியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி கோரோனோ தொற்று இருப்பதாக அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர் கொழும்பு தேசிய தொற்று நோயில் வைத்தியசாலையில் (ஐடிஎச்) சிகிச்சைக்கு அனுப்பிவைக்கப்பட்டார் .

அதன்பின்னர் கொழும்பில் சுமார் 65 நாள்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தற்போது உடல்நலம் தேறிய அவர் வீடு திரும்பியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir

வேட்டை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

நாளைய (28.05.2020) தலைப்பு வேட்டை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.

* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.

* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.

* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623



## வவுனியாவில் விபத்து

வவுனியா, மே 27

வவுனியா நீதிமன்றுக்கு முன்பாக டிப்பர் மற்றும் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா - யாழ். வீதி வழியாக நகரை நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் நீதிமன்றம் முன்பாக பயணித்தபோது பின்னால் சென்ற ஓட்டோ மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் ஓட்டோ கடுமையான சேதமடைந்தது டன், அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முகாமாலையில் மீண்டும் 2ஆம் திகதி அகழ்வுப்பணி

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சி - பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் எலும்புக்கூடுகள் காணப்பட்ட இடத்தில் 2ஆம் திகதி மீண்டும் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முகமாலைப் பகுதியில் காணப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான முதல்நாள் அகழ்வுப் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது 3 துப்பாக்கிகள், மகசீன்கள் - 8, அவற்றுக்குரிய தோட்டாக்கள், கைக்குண்டுகள் - 2 என்பன மீட்கப்பட்டிருந்தன.

பெண்களின் ஆடைகளுடன் விடுதலைப்புலிகளின் சீருடையுடன் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டன.

எலும்புக்கூட்டு எச்சத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் இலக்கத்தகடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இந்தத் தகட்டில் த.வி.பு - ஞா - 0164 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று நிறைவுக்கு வந்துள்ள நிலையில், எதிர்வரும் 02ஆம் திகதி அடுத்த கட்ட அகழ்வுப் பணிகள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

## ராஜிதவின் பிணை மனு வேறு நீதிமன்றத்துக்கு

கொழும்பு, மே 27

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்னவின் பிணை மனுவை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்குக் கொழும்பு பிரதான நீதிவான் தீர்மானித்துள்ளார்.

சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்னவின் பிணை மனு மீதான விசாரணையை 02ஆம் இலக்க நீதவான் நீதிமன்றில் விசாரிக்க வேண்டும் எனக் கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது சர்ச்சைக்குரிய வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பாதிப்புப் பற்றிய புள்ளிவிவரங்கள் சரியானவை என சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள் குறித்து வெளியிடப்படும் புள்ளி விவரங்கள் துல்லியமானவை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் வெளியிடும் புள்ளிவிவரங்கள் பிழையானவை, வேண்டுமென்றே குறைத்து காண்பிக்கப்படுபவை என சுயாதீன தொழில்சார் நிபுணர்களின் கூட்டமைப்பு என்ற அமைப்பின் அறிக்கையொன்று தெரிவித்திருந்தது.

அந்த அறிக்கையில், இலங்கையில் தற்போது இரு வேறு பகுதிகளில் கொரோனா நோயாளர்கள் உள்ளனர். அரசாங்கம் தெரிவிப்பது போல கடற்படையினர் மத்தியில் மாத்திரம் நோயாளர்கள் காணப்படவில்லை என அது தெரிவித்திருந்தது.

மாகாண மருத்துவ அதிகாரிகளும் பொது சுகாதார பரிசோதகர்களும் அரசாங்கம் வெளியிடும் தகவல்களிற்கு எதிர்ப்புதெரிவித்துள்ளமையுடன், ஜனாதிபதிசெயலணியின் உறுப்பினர்களும் அரச தகவல் திணைக்கள அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் புள்ளிவிவரங்கள் துல்லியமற்றவை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர் என சுயாதீன தொழில்சார் நிபுணர்களின் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

சோதனை நடவடிக்கையின்போது நோயாளர்கள் என இனம் காணப்பட்ட முடிவுகளில் 40 வீதம் கூட அரசாங்கத்தின் புள்ளிவிவரங்களிற்குள் உள்ளடக்கப்படவில்லை என ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களும் அரச தகவல் திணைக்கள அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளனர் என சுயாதீன தொழில்சார் நிபுணர்களின் கூட்டமைப்பு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனினும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பபா பலிஹவர்தன இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

நோயாளர்கள், உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்கள் உரிய மருத்துவமனைகளில் இருந்து கிடைத்ததும் உடனடியாக அவற்றை பகிரங்கப்படுத்துகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படைக்குள் மாத்திரம் தற்போது நோய் தொற்று காணப்படுகின்றது என குறிப்பிட்டுள்ள அவர், வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவர்கள் மத்தியில் வைரஸ் தாக்கம் காணப்படுகின்றது. ஆனால் அவற்றை தனிமைப்படுத்தல் முகாம்களுடன் கட்டுப்படுத்திவிட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏனைய பகுதிகளில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். நாங்கள் நிலைமையைக் குறைத்துச் சித்திரிக்கின்றோம் என்ற குற்றச்சாட்டுகளை நாங்கள் நிராகரிக்கின்றோம் என தெரிவித்துள்ள பபா பலிஹவர்த்தன, எங்களிற்கு குறிப்பிட்ட பிரிவுகளில் இருந்து கிடைக்கும் புள்ளி விவரங்களை தவிர வேறு புள்ளிவிவரங்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் கொரோனாப் பலி ஒரு லட்சத்தையும் தாண்டி உயர்வு



கொரோனா தொற்று காரணமாக அமெரிக்காவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது.

வைரஸ் தொற்றின் மையமாக மாறிப்போன அந்நாட்டில் பெருந்தொற்று ஏற்பட்டதால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 17 லட்சத்து 25 ஆயிரத்தைக் கடந்தது. மேலும் இன்று காலை நிலவரப்படி 736 பேர் உயிரிழந்தமையைத் தொடர்ந்து, அமெரிக்காவில் கொரானா பாதிப்பால் பலியானோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 500 ஆக உயர்ந்துள்ளது.

இந்த எண்ணிக்கை வியட்னாம் போரில் இறந்த அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கையை விட இருமடங்கு அதிகமாகும். மேலும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு 17 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் அங்கு மரணிப்போர் எண்ணிக்கை அதிகமாகும் என்று அஞ்சப்படுகிறது. நான்கு லட்சத்து 78 ஆயிரம் பேருக்கு மேல் சிகிச்சை முடிந்து வீடுகளுக்கு திரும்பியுள்ள நிலையில் 11 லட்சத்து 46 ஆயிரம் பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# நாளையுடன் முடிகிறது அக்னிநட்சத்திர வெயில்



கடந்த 24 நாள்களாக வாட்டி வதக்கி வந்த அக்னி நட்சத்திரம் நாளையுடன் விடைபெறுகிறது.

கடந்த 4 ஆம் திகதி தொடங்கிய அக்னி நட்சத்திரத்தால் மக்கள் வெயிலின் கொடுமையில் சிக்கி தவித்து வருகின்றனர்.

தமிழகத்திலும் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்ததால் மக்கள் பெரிதும் சிரமப்பட்டனர். இந்த நிலையில் அக்னிநட்சத்திரத்தின் தாக்கம் நாளையுடன் நிறைவடைகிறது. இதனால் வரவிருக்கும் நாட்களில் வெப்பநிலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சோதனைகளில் அரைவாசி தோல்வி




கொரோனா தொற்றைக் கண்டுபிடிக்க கடந்த காலங்களில் நடத்தப்பட்ட ஆன்டிபாடீஸ் (பிற பொருள் எதிரிகள்)சோதனைகளில் பாதிக்கும் மேற்பட்டவை தவறான முடிவுகளை தந்துள் என என அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

தொற்று ஏற்பட்ட முதல் வாரத்தில் மட்டும் சில நபர்களுக்கு இந்த சோதனை மூலம் நோய் உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. ஒட்டு மொத்த தொற்று குறித்த சரியான தரவுகளை பெறுவதற்கு இந்த சோதனை போதுமானவை அல்ல என்றும் அதுதெரிவித்துள்ளது..

அமெரிக்காவில் கொரோனா பாதிப்பு அதிகம் உள்ள இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் நபர்களின் ரத்தத்தில் பிறபொருள் எதிரிகளின் அளவு 5 முதல் 25 சதவிகிதம் வரையே காணப்படுவதாவும் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

# சீன இராணுவத்தைப் போருக்குத் தயாராகும்படி அதிபர் கட்டளை



உலகமே கொரோனாவால் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் போருக்குத் தயார் நிலையில் இருக்கும்படி தனது இராணுவத்தினருக்கு கட்டளையிட்டுள்ளார் சீன அதிபர் ஷி ஜின்பிங்.

உலகம் முழுவதும் மூன்றரை லட்சம் பேரை பலி கொண்டுள்ள கொரோனா வைரஸுக்கு சீனாதான் காரணம் என்று அமெரிக்கா பகிரங்க குற்றம் சாட்டியுள்ளது. இதையடுத்து சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமான சொற்போர் வலுத்துள்ளது. இன்னொரு புறம் இந்திய எல்லையில் சீனா தனது படைகளைக் குவித்திருப்பதால் இந்தியாவும் படைபலத்தை அதிகரித்து வருகிறது. இதனால் லடாக் எல்லைக் கோடு அருகே கடந்த 22 நாள்களாகப் பதற்றநிலை நீடித்து வருகிறது. சீனப் படைகளும் இதுவரை பின்வாங்குவதாக தெரியவில்லை.

கொரோனா வைரஸால் உலகமே ஆடிப்போயிருக்கும் நிலையிலும் படைகள் தயார் நிலையில் இருக்கும்படி சீன அதிபர் ஜின்பிங் கட்டளையிட்டுள்ளார். சீன அதிபர் மக்கள் விடுதலை இராணுவத்தின் கூட்டத்தில் உரையாற்றும்போது இராணுவத்தை பலப்படுத்தி போருக்குத் தயாராக இருக்கும்படி கூறினார் எனச் சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# நாடு தழுவிய நெருக்கடி நிலை ஜப்பானில் முழுமையாக வாபஸ்




ஜப்பானில் சுமார் ஒன்றரை மாதமாக நடைமுறையில் இருந்த நாடு தழுவிய நெருக்கடி நிலை அந்நாட்டு அரசால் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நாடு தழுவிய நெருக்கடி நிலை அமலில் இருந்தது. இக்காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் கொரோனா பாதிப்பு வெகுவாக குறைந்தது.

இதையடுத்து 5 பிராந்தியங்களைத் தவிர்த்து எஞ்சிய பிராந்தியங்களில் நெருக்கடி நிலை படிப்படியாக வாபஸ் பெறப்பட்டது. தற்போது எஞ்சிய 5 பிராந்தியங்களிலும் நெருக்கடி நிலையை திரும்பப் பெற்றுள்ளது. நாட்டு மக்களின் சிறந்த ஒத்துழைப்பால், ஆறு வாரங்களில் கொரோனாவைக் கட்டுப் படுத்தி விட்டதாக பிரதமர் ஷின்சோ அபே கூறியுள்ளார்.

# 900 தலிபான்களை விடுவிக்க ஆப்கானிஸ்தான் அதிபர் முடிவு



ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பைச் சேர்ந்த மேலும் 900 பேரை சிறையிலிருந்து விடுவிக்க அந்நாட்டு அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்துப் பேசிய அந்நாட்டு தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் செய்தித் தொடர்பாளர், 900 கைதிகளை இன்று விடுவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு இந்த எண்ணிக்கை மாறுபடலாம் எனவும் தெரிவித்தார். ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை தலிபான் பயங்கரவாதிகள் 3 நாள் சண்டை நிறுத்தத்தை அறிவித்தனர்.

அதற்காக நேற்று முன்தினம் பக்ராம் சிறையில் இருந்து 100 தலிபான் கைதிகளை அரசு விடுதலை செய்தது. முன்னதாக ஆப்கானிஸ்தானில்போரைமுடிவுக்குக்கொண்டு வர சிறைகளில் உள்ள 5 ஆயிரம் தலிபான்தீவிரவாதிகளைவிடுவிக்க அந்நாட்டு அதிபர் ஒப்புக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் வெட்டுக்கிளிகள் படையெடுப்பு மோசமான வேளை நடக்கும் என எச்சரிக்கை

இந்தியாவில் வெட்டுக்கிளிகள் படையெடுப்பு மோசமான காலத்தில் நடைபெறும் தீவிரமான பூச்சித் தாக்குதல் எனச் சுற்றுச்சூழல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு நாடுகள், தெற்காசிய நாடுகளில் வெட்டுக்கிளிகள் படையெடுத்துப் பயிர்களை அழிப்பதால் விவசாயிகளுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேச மாநிலங்கள் வெட்டுக்கிளிகள் படையெடுப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கொரோனா பரவிய காலத்தில் வெட்டுக்கிளிகளும் பேரழிவை ஏற்படுத்துவது மோசமான காலக்கட்டத்தில் நடைபெறும் மிகத் தீவிரமான பூச்சித் தாக்குதல் எனச் சுற்றுச்சூழல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ராஜஸ்தானில் இருந்து வடகிழக்கு நோக்கிக் காற்று வீசுவதால் வெட்டுக்கிளிகள் கூட்டம் டெல்லியை நோக்கிச் செல்லும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.



# ஆறுமுக தொண்டமானுக்கு இரங்கல் செய்திகள்





## ஆறுமுகனின் இறுதிக் கிரியைகள் கொட்டகலையில் இடம்பெறும்

காலஞ்சென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கிரியைகள் கொட்டகலையில் நடைபெறவுள்ளன என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தமது 55ஆவது வயதில் காலமானார். திடீர் உடல்நலக் குறைவினால் நேற்று கொழும்பு - தலங்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் காலமானார்.

நேற்றிரவு பிரேத பரிசோதனைகளின் பின்னர், அவரது உடல் குடும்ப உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிலையில், அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 11 மணி வரை பொரளையிலுள்ள தனியார் மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் அன்னாரின் பூதவுடல் கொழும்பிலுள்ள அன்னாரது இராஜகிரிய இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. நாளை பூதவுடல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து கொழும்பிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கட்சித் தலைமையகமான சௌமியபவனுக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

அதன்பின்னர் அங்கிருந்து றம்பொடையிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, மீண்டும் பூதவுடல் கொட்டகலைக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது. அங்கு மக்களின் அஞ்சலி நிகழ்வுகள் நிறைவு பெற்றபின்னர், கொட்டகலையில் இறுதிக்கிரியைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழினத்துக்குப் பேரிழப்பு ஆனந்தசங்கரி வேதனை



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்தவை வருமாரு:-

அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் மறைவு மலையக மக்களுக்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கும் ஒரு பேரிழப்பாகும்.

ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் திடீர் மறைவுச் செய் தியை கேட்டு நான் பேரதிர்ச்சி அடைந்தேன் அமரர் ஆறு முகன் தொண்டமான் மலையக மக்களை மிகவும் நேசித்த ஒரு மனிதர். எவருக்கும் அஞ்சாமல் தனது கருத்தை துணிச்சலுடன் எடுத்துரைக்கும் ஒரு மிடுக்கான அரசியல்தலைவர். மலையகத்தமிழர்களின்விடிவெள்ளியும், மிகச்சிறந்த தொழிற்சங்கவாதியுமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் 1972 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அரசியல் ரீதியான சவால்களுக்கு முகம் கொடுப்பதற்காக, தந்தை செல்வா, சட்டமாமேதை அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோரால் இணைந்து உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில், ஒட்டுமொத்த தமிழ் மக்களின் நன்மை கருதி, இணைத்தலைவர்களில் ஒருவராகவும் செயற்பட்டு, 1977 ஆம்ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் மலையகத்தில் தேர்தலுக்கு முகம் கொடுத்தவர். அந்த வழியில் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் எம்முடன் நல்லுறவை பேணியமையோடு, அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்தும் மலையக மக்களுக்கு ஆற்றிப் பெரும் மதிப்புடன் வாழ்ந்தவர்.

அன்னார் அரசியலில் எவ்வாறான அலைகள் அடித்தாலும், எவராலும் வீழ்த்த முடியாத மக்கள் செல்வாக்கை தக்க வைத்திருந்தார். மூத்த அரசியல் தலைவர்களுடன் மிகவும் மரியாதையுடனும், மதிப்புடனும் மகிழ்ந்து உரையாடுவார். அத்துடன் தன்னை சுற்றியிருக்கின்ற தொண்டர்களுக்கு வேண்டிய நேரத்தில் தேவையானவற்றை செய்து கொடுப்பதில் வல்லவர். அதனால் அவருக்கு விஸ்வாசமான, நம்பிக்கையான தொண்டர் கூட்டம் அவரை சுற்றி வலம் வந்து கொண்டே இருக்கும். தனது மக்களுக்காக அரசுடன் பேரம் பேசி அவர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் மறைவு மலையக மக்களுக்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்ததமிழ்இனத்துக்கும்ஒருபேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள் மற்றும் அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் தொண்டர்கள் அனைவருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

## ஒட்டுமொத்த இலங்கைக்கும் பேரிழப்பு என்கிறார் சம்பந்தன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-


இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் அவர்களின் அகால மரண செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகிறேன்.

மலையக மக்களிற்காக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஒலித்த ஒரு குரல் இன்று மௌனித்து விட்டது. அமைச்சர் தொண்டமான் அவர்கள் அமரர் சௌமியமூர்த்தி தொண்டைமானின் வழியில் மலையக மக்களின் விடிவிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒரு தலைவராவார். அமைச்சராக பதவி வகித்த காலப்பகுதிகளில் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நன்மை கருதி அநேக வேலைத்திட்டங்களை முன்னெடுத்த ஒரு தலைவராகவும் மக்களின் நலனைப் பிரதிபலிக்கும் வகையில் செயற்பட்ட ஒரு மக்கள் தலைவராகவும் செயற்பட்டார்.

அன்னாரது மறைவானது மலையக மக்களிற்கு மாத்திரமல்லாது முழு இலங்கை வாழ் மக்களிற்கும் ஒரு பாரிய இழப்பாகும். அமரர் சௌமியமூர்த்தி தொண்டைமானின் மறைவிற்கு பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்குத் தலைமைத்துவம் கொடுத்து மலையக மக்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்த ஒரு தலைவராக ஆறுமுகம் தொண்டமான் அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கி விட்டார்கள்.

இந்தத் துயரமான சந்தர்ப்பதில் அன்னாரின் இழப்பால் தவிக்கும் அவரது கும்பத்தினருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மலையக மக்களின் உயர்விற்கும் விடிவிற்கும் அன்னார் முன்னெடுத்த முயற்சிகளை அயராது தொடர்ந்தும் முன்னெடுப்பதன் மூலம் அம்மக்களின் உயர்வினை உறுதி செய்வதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும். - என்றுஉள்ளது.

## 30 வருடங்களாக ஓயாது ஒலித்த குரல் மௌனித்தது என செல்வம் வேதனை



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் காலமானார் என்றசெய்திஆழ்ந்தவேதனையை ஏற்படுத்தி உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஓயாது ஒலித்த குரல் மௌனித்து விட்டது எனவும் அவர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆறுமுகம்தொண்டமானின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். மலையக மக்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் 30 வருடங்களுக்கு மேலாக ஓயாது ஒலித்த குரல் அவருடையது.

அவருடைய பாட்டனார் சௌமியமூர்த்தி தொண்டமானை போல் மலையக மக்களை நேசித்த உன்னத மனிதன் ஆறுமுகன் தொண்டமான்.

அன்னாரின் மறைவுத் துயரில் வாடும் குடும்பத்தாருக்கும் மலையக மக்களுக்கும் என் சார்பாகவும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பிலும் ஆழந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றுகுறிப்பிடப் பட்டுள்ளது.

# ஆறுமுக தொண்டமானுக்கு இரங்கல் செய்திகள்

## தன் மண் மீதும் மக்கள் மீதும் பற்றுக் கொண்ட ஆறுமுகன்



### சிறீதரன் புகழஞ்சலி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானின் திடீர் மறைவு மலையக மக்களுக்கு பேரிழப்பாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவு குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு :-

மலையக மக்களின் வாழ்வுரிமைக்கும், தொழிற்சங்க உரிமைகளுக்குமாக போராடிய முதல் மலையகத் தமிழ் அரசியற் தலைவரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமான் அவரது வழியில் நின்று மலையக மக்களின் தலைவராக செயற்பட்டு வந்தமை அனைவரும் அறிந்ததே.

ஈழத்தமிழர்களைப் போலவே தமது இருப்பைத் தக்கவைத்து, உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக போராடி வரும் மலையகத் தமிழர்களின் வழிகாட்டியாக, தனது முப்பது வயதிலேயே நாடாளுமன்ற உறுப்பினராக மக்கள் ஆணை பெற்று ஓர் இளம் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும் இருந்து இருபத்தைந்து வருடங்களாக மலையக மக்களின் அரசியற் பிரதிநிதியாக அம்மக்களுக்காக குரல்கொடுத்து வரும் ஆறுமுகம் தொண்டமானின் இழப்பு மலையக மக்களுக்குப் பேரிழப்பே!

தனது வாழ்வின் இறுதிக் கணங்களில் கூட புதிய இந்திய உயர்ஸ்தானிகருடன் மலையக மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்து, அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் உரையாடியுள்ளமை அவர் தனது மண் மீதும், மக்கள் மீதும் கொண்டிருந்த பற்றின் வெளிப்பாடே ஆகும்.

மிக நீண்டகாலமாக மலையக மக்களுக்காக ஓங்கி ஒலித்து வந்த உரிமைக்குரல் இயற்கையின் நியதியால் ஓய்ந்தாலும் கூட வாழும் காலத்தில் மக்களுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகள் மூலம் அவர் என்றென்றைக்கும் மக்கள் மனங்களில் நீங்காது நிலைத்திருப்பார். - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆறுமுகன் தொண்டமானின் மறைவு தமிழ்ப் பேசும் சமூகத்துக்கு பேரிழப்பு

### விஜயகலா மகேஸ்வரன் அனுதாபம்

மலையக மக்களின் உரிமைக் குரலாகவும் ஊன்றுகோலாகவும் திகழ்ந்த ஆறுமுகன் தொண்டமானின் மறைவு மலையக சமூகத்துக்கு மட்டுமல்ல, முழு தமிழர்களுக்கும் பேரிழப்பாகும் என்ற முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்



வரன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவையடுத்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மலையகம் வாழ் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளுக்காகவும் தேவைகளுக்காகவும் தொடர்ச்சியாக ஆறுமுகன் தொண்டமான் குரல் கொடுத்து வந்தார். 1993 ஆம் ஆண்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூலம் அரசியலில் பிரவேசித்த ஆறுமுகன் தொண்டமான் அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மலையக மக்களுக்குப் பெரும் சேவையாற்றியுள்ளார். மலையகத்தில் வாழும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காகவும் வடக்கு, கிழக்கில் வாழும் மலையக வம்சாவளி மக்களுக்காகவும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் ஆறுமுகன் தொண்டமான் குரல் கொடுத்து வந்தார்.

அரசாங்கங்களின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களை வகித்த போது வடக்கு, கிழக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அவர் முயற்சி செய்தார். தற்போதைய அரசாங்கத்தில் சமுதாய அபிவிருத்தி அமைச்சையும் அவர் கொண்டிருந்தமையினால் அதன்மூலமும் வடக்கு, கிழக்கில் பல்வேறு சேவைகளை செய்வதற்கு அவர் முயன்றிருந்தார். கடந்த ஜனவரி மாதமளவில் அவரது அமைச்சின் சார்பில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் எ ன்னையும் பங்கேற்குமாறு அவர் அழைப்பும் விடுத்திருந்தார். இவ்வாறு வடக்கு, கிழக்கு தலைமைத்துவங்களுடன் ஒற்றுமையாகவும் ஒருமைப்பாட்டுடனும் செயற்படுவதற்கு அவர் முயன்றிருந்தார்.

இவ்வாறு மலையக சமூகத்துக்கும் ஏனைய இன மக்களுக்கும் சேவையாற்றும் எண்ணத்துடன் செயற்பட்டு வந்த ஆறுமுகன் தொண்டமானின் மறைவு தமிழ் பேசும் நல்லுலகுக்கு பேரிழப்பாகும். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் மலையக மக்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்று உள்ளது.

## மலையகத் தமிழ் சமூகத்தை வெறுமையால் வாட வைத்திருக்கும் தொண்டாவின் இழப்பு

### இரட்டை குழல் ஜனநாயகத் துப்பாக்கி தானும் ஆறுமுகனும் என்கிறார் மனோ



ஆறுமுகனும், நானும் இரட்டை குழல் ஜனநாயக துப்பாக்கி; இன்று நண்பர், அரசியல் சகபாடி ஆறுமுகன் இல்லைஎன்றுவேதனைதெரிவித்துள்ள தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், கொழும்பு உட்பட மலையகமெங்கும் வெள்ளை, கறுப்பு கொடிகளை பறக்க விட்டு அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆறுமுகனின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

இனரீதியாக சிந்தனை கூர்மையாக்கப்பட்டுள்ள இந்நாட்டில், பெரும்பான்மை இன அரசியல் தலைவர்கள், கட்சிகள், அரசாங்கங்கள் மத்தியில் நாம் சுழியோடி எங்கள் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றோம். எமது மக்களுடைய எதிரிகளுடன், எமக்கு உடன்பாடுள்ள அனைத்து வழிமுறைகளிலும் நாம் போராடுகிறோம், சண்டையிடுகிறோம், முரண்படுகிறோம்.

இந்தப் பின்னணியில் நண்பர் ஆறுமுகன் தொண்டமானும் நானும் வெவ்வேறு திசைகளில் பாயும் ஒரே இலக்கை கொண்ட நதிகள். இரட்டை குழல் ஜனநாயக துப்பாக்கி. மறைந்த நண்பர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொழும்பு உட்பட மலையகமெங்கும் வெள்ளை, கறுப்பு கொடிகளைப் பறக்க விடும்படி தமிழ் முற்போக்கு கூட்டணி தோழர்களையும் அனைத்து மக்களையும் கோருகிறேன்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை இந்திய காங்கிரஸின் மறு வடிவம். அந்த உறுதியான ஆரம்பமே இன்று ஒரு தொழிற்சங்கமாகவும், அரசியல் கட்சியாகவும் இ.தொ.காவை நிலைநிறுத்தி இருக்கிறது. இலங்கை இந்திய காங்கிரஸ் காலத்தில் இருந்தே அதற்குள் நிகழ்ந்து வந்த கோட்பாட்டு முரண்பாடுகள் காரணமாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பிறந்தது. அந்த சிந்தனையே இன்று ஜனநாயக மக்கள் முன்னணியாக இன்று சகோதர கட்சிகளுடன் இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டணியாக பரிணமித்துள்ளது.

இதொகாவை விட்டு பலர் பல காரணங்கள காரணமாகப் பிரிந்து சென்ற போதெல்லாம் அதைப் பலவீனமடைய விடாமல் கொண்டு நடத்தியவர் ஆறுமுகன் தொண்டமான். மலையக தமிழ் மக்களின் நலன்களைத் தனக்கே உரிய, தான் நம்பும் வழிமுறைகளில் அவர் பிரதிநிதித்துவம் செய்து வந்தார்.

அவர் இந்த வயதில் இறந்திருக்க கூடாது. இன்னமும் வாழ்ந்து இருக்க வேண்டும். நமது மக்கள் எதிர்நோக்கும் சவால் மிக்க இன்றைய காலகட்ட பின்னணியை கணிக்கும் போதே ஆறுமுகன் தொண்டமானின் திடீர் இழப்பின் ஆழம் புரிகின்றது. வேதனை விளங்குகிறது. அவருடன் அரசியல் ரீதியாக முரண்படுகின்றவர்களுக்கு கூட அவரது இன்றைய மறைவின் வெறுமை தெரிகின்றது.

கடந்த வருடம் இதே மே மாத இறுதியில் புது டில்லியில் நடைபெற்ற பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் இந்திய அரசின் அழைப்பை ஏற்று அன்றைய நமது நாட்டு ஜனாதிபதியின் தூதுக்குழுவில் நாம் இருவரும் பயணித்தோம். அதுவே நண்பர் ஆறுமுகன் தொண்டமானும் நானும் ஒன்றாய் கலந்துக்கொண்ட இறுதி வெளிநாட்டு நிகழ்வு.

இதற்கு சுமார் பத்து வருடங்களுக்கு முன்இ 2009ல் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெற்ற இலங்கையின் அனைத்து தமிழ் பேசும் அரசியல் கட்சி தலைவர்களின் மாநாட்டில் நானும் அவரும் கலந்துக்கொண்டோம்.

இந்நிகழ்வுகளில் நமது மக்களின் நல்வாழ்வு தொடர்புகளிலும் அரசியல் முரண்பாடுகள் மத்தியில் எங்கெங்கே இணைந்து செயற்படலாம் என்பது பற்றியும் நண்பர் ஆறுமுகமும் நானும் நடத்திய கலந்துரையாடல்கள் என் மனதில் பசுமையாக இருக்கின்றன.

2009ல் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெற்ற தமிழ் பேசும் கட்சிகள் மாநாட்டில் நண்பர் பெரியசாமி சந்திரசேகரனும் கலந்துக்கொண்டார். இன்று சந்திரசேகரனும் இல்லை. அவரும் தனது 53 வயதில் இறந்து போய் விட்டார். இன்று நண்பர் ஆறுமுகன் தொண்டமானும் தனது 56 வயதில் இறந்து போய் விட்டார். இந்த வெறுமை இன்று மலையக தமிழ் சமூகத்தை வாட்டுகின்றதைநான்உணருகின்றேன். இந்த சவால்களை நாம் ஒருமுகமாக எதிர்கொள்ள திடசங்கற்பம் பூணுவோம். - என்று உள்ளது.

# ஆறுமுக தொண்டமானுக்கு இரங்கல் செய்திகள்

## ஏற்க முடியாத பிரிவு இது அங்கஜன் கடும் வேதனை



மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பிரிவு என்னால் இன்னும் ஏற்க முடியாதுள்ளதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகப் பதவி வகித்தவர் என்றும் கடந்த பல அரசுகளில் அமைச்சராக பதவி வகித்தவர் என்றும் கூறிய அங்கஜன் இராமநாதன்,தோட்ட உள்கட்டமைப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சராக ஆறுமுகம் தொண்டமான் இருந்த காலப் பகுதியில் என்னுடன் சேர்ந்து யாழ் மாவட்ட மக்களுக்காக பல வீட்டுத்திட்டங்களையும் மலையக வாழ் யாழ் பல்கலை கழக மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்கான பல உதவி திட்டங்களையும் செய்தார் என வும் குறிப்பிட்டார்.

கடந்த பெப்ரவரி 21ம் யாழ் வருகை தந்தபோதும் தெல்லிப்பளை பிரதேச செயலக பகுதியில் வீட்டுத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். யாழ் மக்களுக்காக வீட்டுத் திட்டங்களை தொடர்ந்து தருவார் என உறுதியளித்தார். அவரது பிரிவு என்னால் இன்னும் ஈடுஇணை செய்யமுடியாமல் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

## ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களுக்கும் பெரும் இழப்பு

### வேலுகுமாரும் இரங்கல்



கொழும்பு, மே 27

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவானது மலையக மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த சிறுபான்மையின மக்களுக்கும் பாரிய இழப்பாகும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், முன்னாள் எம்.பியுமான வேலுகுமார் விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

மலையகத் தமிழர்களின் ஆளுமைமிக்க அரசியல் தலைவராக அமரர்.ஆறுமுகன் தொண்டமான் விளங்கினார்.மக்களுக்காக எந்தவொரு அரசாங்கத்துடனும் பேரம் பேசக்கூடிய வல்லமை அவரிடம் இருந்தது. ஆட்சியாளர்களும் அவரை ஒரு தேசிய இனத்தின் தலைவராக அங்கீகரித்திருந்தனர்.

தற்போதைய அரசின் அமைச்சரவையில்கூட சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையிலும் ஒரு சமூகத்தின் குரலாக அவர் ஒலித்தார்.

எவ்வளவுதான் நெருக்கடிகள், சவால்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் சமாளித்து தான் சார்ந்த கட்சிக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கினார்.வெற்றியை நோக்கியும் அழைத்துச்சென்றுள்ளார்.

அரசியல் களத்தில் எமக்கும் அவருக்குமிடையில் கொள்கை ரீதியில் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனபோதிலும் ஒரு சமூகத்தின் தலைவர் அவர். ஒரு சமூகம் தலைவரை இன்று இழந்து தவிக்கிறது. என்னதான் இருந்தாலும் தனது வாழ்வில் பெரும்பகுதியை மலையக மக்களுக்காக செலவிட்டவர்.மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டும்

என்பதற்காக தனக்கே உரிய அரசியல் பாணியில் தீவிரமாக உழைத்தவர். எனவே, நாம் அனைவரும் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும். இறுதிக்கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் இடம்பெறவேண்டும்.

அன்னாரது இழப்பால் துயருறும் அனைவரது துயரிலும் நானும் பங்கேற்கிறேன். ஆன்மா இறைப்பாறவேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன். – என்றுள்ளது.

## விடுதலைப்புலிகள் மீதும் மதிப்பு வைத்து செயல்பட்டவர் ஆறுமுகம் தொண்டமான்

### பழையவற்றை நினைவு கூருகிறார் அரியநேத்திரன்



அமரர் ஆறுமுகம் தொண்டமான் மலையக மக்களுக்கு மலைபோல் அரணாக இருந்து செயல்பட்டாலும் விடுதலைப்புலிகள் மீதும் மதிப்பு வைத்து செயல்பட்டவர். அவரின் இழப்பு வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பட்டிருப்புத் தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் குறுப்பிட்டார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பிரிவு தொடர்பாக அவரின் இரங்கல் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

மலையகத்தலைவராக இருந்த சௌமியமூர்த்தி தொண்டமான், தந்தை செல்வாவுடன் பல் நெடுங்காலமாக வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் அரசியல் உரிமைக்காக குரல் கொடுத்த ஒருவராவார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் 1976 மே,14 ஆம் திகதி எடுக்கும்போது தந்தை செல்வாவுடன் பக்கபலமாக இருந்தவர் மலையக மக்களின் அரசியல் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமான். அவரின் இரத்த வாரிசாக அவரின் பரம்பரையில் உதித்த ஆறுமுகம் தொண்டமான் மலைகத்தமிழ் மக்களுக்காக மட்டுமன்றி எமது வடக்கு, கிழக்கு தமிழ்மக்களுக்காகவும் குரல்கொடுத்த ஒருவராவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எமது தாயக மண்ணில் 70 சதவீத நிலப்பரப்பில் நடைமுறை நிர்வாக அரசு செய்த வேளையில் 2001 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கொக்கட்டிச்சோலையில் விடுதலைப்புலிகளின் மாவட்ட தலைவர்களுடனான சந்திப்பிற்காக கால்நடை அபிவிருத்தி அமைச்சராக இருந்த அவரை நான் கொக்கட்டிச்சோலைக்கு அழைத்துச் சென்று கலந்துரையாடிய வரலாறுகள் உண்டு.

அவர் விடுதலைப்புலிகளை மதிப்பு வைத்து உரையாடியமையை நான் நேரில் கண்டேன்.

எனக்கு அவரை 2001 ஆம் ஆண்டு தொடக்கம் தெரியும். அதன்பின்பு 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரை 11 வருடங்கள் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் அவருடன் சில விடயங்கள் தொடர்பாகக் கதைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

கிளிநொச்சியிலும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்செல்வனுடனும் அங்கு சென்று பல விடயங்களை அவர் அமைச்சராக இருக்கும்போதே கதைத்து வந்தமையை நான் அறிவேன்.

தற்பொது விடுதலைப் புலிகளின் முள்ளிவாய்க்கால் மௌனத்திற்குப் பின்பு பலர் விடுதலைப்புலிகளின் கடந்த கால செயல்பாடுகளையும் மூடி மறைக்கப்பார்கின்றனர்.உண்மையில் இலங்கை அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த ஆறுமுகம் தொண்டமான் உட்பட பலர் விடுதலைப் புலிகளைச் சந்தித்த வரலாறுகள் உண்டு.

அவரை முதன்முதலாக நான் அவர் அமைச்சராக இருக்கும்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் ஒரு வீட்டுத் திட்டம் அமைக்கும் இடத்தை பார்வை இடுவதற்காக கிரான் சந்தியில் அவருடன் வந்த இராணுவ, பொலிஸ் பாதுகாப்புத் தரப்புக்களை விட்டுவிட்டு அமைசச்ர் ஆறுமுகம் தொணரடமான் அவரின் வாகனத்தை செலுத்தினார். நான் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டு புலிபாய்ந்த கல் வீடமைப்பு திட்ட இடத்தை பார்வையிட்டபின் படுவான்கரை பெருநிலம் ஊடாக கொக்கட்டுச்சோலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளராக அப்போது செயல்பட்ட கரிகாலன் மற்றும் விடுதலைப் புலிகளின் தளபதிகள் சிலருடன் சந்திப்புக்களை நடத்தினார். அன்று மதியபோசனமும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு வழங்கப்பட்டது.

இந்த சந்திப்பில் நானும் ஊடகவியலாளர்களான இரா.உதயகுமார்,ஜீ.நடேசன் போன்றவர்களும் கலந்து கொண்டோம்.

உண்மையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கும் தம்மால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும் என்ற நோக்கம் அவரிடம் இருந்தது. எனினும் அவரை மீறிய இலங்கை ஆட்சியாளர்கள் அவரால் முன்வைத்த வடக்கு, கிழக்கில் உள்ள பல திட்டங்களை செய்ய முடியாமல் தடைபோட்ட வரலாறுகளும் இருந்தது என்பது உண்மை.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மலையக ம க்களுக்கு மலைபோன்று சக்திவாய்ந்த ஓர் அரசியல்வாதியாக செயல்பட்டாலும் வடக்கு, கிழக்கு தமிழ்மக்களுக்கும் முடிந்தவைகளை செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கம் அவருக்கு இருந்தது. தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு எதிர்வரும் பொதுத்தேர்தலில் வேட்பாளராக வேட்பு மனுவைத் தாக்கல் செய்து காபந்து அரசில் அமைச்சராக பணிபுரியும் போது இயற்கை எய்திய செய்தி தாங்கமுடியாத வேதனையைத் தருகின்றது.

இந்தப் பிரிவால் துயருறும் அன்னாரின் மனைவி, மக்கள், மலையக மக்கள்,உறவினர்கள் எல்லோரோடும் இணைந்து எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியை தெரிவிக்கின்றோம். – என அவர் மேலும் கூறினார்.

## ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளில் மிக அக்கறையாகச் செயற்பட்டவர்

### புளொட் சித்தார்த்தன் புகழாரம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தமது அஞ்சலிச் செய்தியில் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களுடைய இழப்பு மலையக மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

இவருடைய பேரனார் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் காலம் தொட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையகத்தில் ஒரு மாபெரும் தொழிற்சங்கமாகவும் அத்துடன் ஒரு அரசியல் கட்சியாகவும் இருந்து வருகிறது.



சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் மறைவிற்குப் பின்னர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களுடைய தலைமையிலும் கூட அது ஒரு மிகப் பலம் வாய்ந்த அமைப்பாகவே இருந்து வருகிறது.

அத்துடன் வடகிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினையில் மிகுந்த அக்கறை கொண்டு 70களில் முதல் முதலாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பித்த போது சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா அவர்கள் அதன் தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.

அவரது மறைவிற்கு பிறகு ஆறுமுகம் தொண்டமான் அவர்களும் ஈழத் தமிழர் பிரச்சினையில் மிகவும் அக்கறையாக செயற்பட்டார்.

ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஐரோப்பிய நாடுகளிலே நடைபெற்ற பல கூட்டங்களில் அவருடன் நான் கலந்து கொண்டிருந்தபோது தமிழர் பிரச்சினை தொடர்பில் அவர் ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

அவருடைய இழப்பு தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் எமது கட்சி சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். – என்று உள்ளது.

# ஹொங்கொங் பாணி தீர்வை தலைவர் பிரபாகரன் ஏற்றார்!



## அவரது கடிதத்தைத் தொண்டமானிடம் ஒப்படைத்தோம் என்கின்றார் சச்சி

யாழ்ப்பாணம், மே 27

ஹொங்கொங் பாணியிலான தீர்வுத்திட்டமொன்றை ஏற்றுக்கொள்கிறேன் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எழுதித்தந்த கடிதத்தை, ஆறுமுகன் தொண்டமானிடம் ஒப்படைத்தோம் என பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளார் இலங்கை சிவசேனையின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன்.

காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்கு அவர் வெளியிட்ட அஞ்சலிக் குறிப்பிலேயே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அலுவலகம் கொள்ளுப்பிட்டியில். 1973 - 1975 காலப் பகுதியில் பேரின்பநாயகமும் நானும் அங்கு வாரம் ஒரு முறையாவது செல்வோம்.

தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், செயலாளர் செல்லச்சாமி இருவரையுமோ அல்லது ஒருவரையோ சந்தித்து வருவோம். அக்காலங்களில் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அல்லர்.

சௌமியமூர்த்திதொண்டமான்வாழ்ந்த காலங்களில் அவர் வழிவந்த திரு ஆறுமுகம் தொண்டமான் எனக்கு அறிமுகமானார்.

1994 இல் சந்திரிகாவின் அமைச்சரவையில் சௌமியமூர்த்தி தொண்டமான் அமைச்சராக இருந்தார்.

சென்னைக்கு வந்திருந்தார். அவருக்கு மருத்துவராக இருந்த என் அருமை நண்பர் என்னை அழைத்தார். அமைச்சர் தொண்டமான் உங்களைச் சந்திக்க விரும்புகிறார் எனச் சொன்னார்.

மருத்துவர் கீழ்ப்பாக்கத்தில் இருந்தார். எனவே அவரிடம் நேரே போனேன். அங்கே ஆறுமுகம் தொண்டமான் இருந்தார்.

சென்னை புரசைவாக்கத்தில் மேனாள் காங்கிரஸ் அமைச்சர் திருமதி அனந்தநாயகி இல்லத்தில் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் தங்கியிருப்பதாகவும் அங்கு வர முடியுமா எனவும் ஆறுமுகம் என்னிடம் கேட்டார்.

இருவருமாகச் சென்றோம். சீனா - பிரித்தானியா அரசுகள் பேசிக் கொண்டிருந்த காலம். ஒங்கொங்கு (ஹொங்கொங்) தீவின் எதிர்காலம் குறித்த செய்திகள்வெளிவந்துகொண்டிருந்தன. சீனாவின் பகுதியாக ஹொங் கொங் மாறும். ஆனால்ஹொங்கொங்தனது தனித்துவத்தைப்பேணும்என்றவகையில் தீர்வுகளை நோக்கி வரைவுகள் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் தொண்டமான் என்னிடம் கூறினார்.

அதை ஒத்த தீர்வு ஒன்றினை இலங்கையிலும் ஏற்படுத்தலாம் எனத் திருமதி சந்திரிகாவுடன் பேசிக் கொண்டிருப்பதாக என்னிடம் அமைச்சர் தொண்டமான் கூறினார்.

பிரபாகரனின் ஒப்புதலைப் பெறவேண்டிய நேரம் வந்துவிட்டதாக அமைச்சர் தொண்டமான் கருதினார்.

பிரபாகரன் இதற்கு ஒப்புவாரா? அல்லது இத்தகைய பேச்சுவார்த்தையை நோக்கித் தாம் முன்னெடுத்தால் பிரபாகரன் சார்பில் கலந்து கொள்வார்களா? என்றெல்லாம் அமைச்சர் தொண்டமான் என்னிடம் கேட்டார்.

வெளியே வந்த நான் பழ.நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் இருவரையும் சந்தித்துத் தொண்டமான் சொன்ன முன்மொழிவுகளை எடுத்துக் கூறினேன்.

அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று தொண்டமான் உடன் பேசலாமா? எனக் கேட்டேன்.

பழ நெடுமாறன் வருவதற்கு ஒப்புக் கொண்டார். அவரை அழைத்துக் கொண்டு சென்னை கீழ்ப்பாக்கம் பிரீசு விடுதியில் அமைச்சர் தொண்டமானைச் சந்தித்தோம். ஆறுமுகம் தொண்டமான் உடனிருந்தார்.

என்னிடம் கூறிய அதே செய்தியை அமைச்சர் தொண்டமான் பழ நெடுமாறனிடம் கூறினார். தனது முன்மொழிவுகள் தொடர்பாக ஆதரவான கடிதமொன்றைத் பிரபாகரனிடம் பெற்றுத் தர முடியுமா என அமைச்சர் தொண்டமான் கேட்டார்.

முயற்சிக்கலாம் எனக் கூறி பழ நெடுமாறனும் நானும் வெளியே வந்தோம். பிரபாகரனிடம் இது தொடர்பாகப் பேசும் பொறுப்பை பழ நெடுமாறன் ஏற்றுக் கொண்டார்.

சில வாரங்களின் பின் பிரபாகரனிடம் இருந்து கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து பழ நெடுமாறன் என்னிடம் கொடுத்தார். அமைச்சர் தொண்டமானிடம் சேர்க்குமாறு கூறினார்.

நீங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியை அமைச்சரவையில் தொடருங்கள். அமைச்சரவையில் ஈழத் தமிழர் நலனுக்காக குரல் கொடுங்கள் என்ற கருத்து அந்த ஆறு வரிக் கடிதத்தில் இருந்தது.

கீழ்ப்பாக்கத்திலுள்ள மருத்துவரிடம் நேரில் சென்று செய்தி சொன்னேன்.

1991க்குப் பின் தமிழகம், ஈழத்தமிழர் தொடர்பாக வெளிப்படையாக ஆதரவு அளிக்க முடியாத நிலையில் இருந்தது. இந்திய அளவில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் சட்டம் இருந்தது.

1991 இராசீவரைச் (ராஜீவ்) சந்திக்கச் சென்றமை தொடர்பாக மல்லிகையில் என்னையும் சேர்த்து விசாரித்துக் கொண்டிருந்த காலம்.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் தந்த கடிதம் என் இல்லத்தில் இருந்தது. மருத்துவருக்கு மட்டுமே விவரம் தெரியும். பழ நெடுமாறனுக்கும் விவரம் தெரியும்.

ஒரு வாரம் கழித்து மருத்துவர் என்னை அழைத்தார். மருத்துவமனைக்கு வாருங்கள் என்றார். கடிதத்துடன் சென்றேன். அங்குஆறுமுகம்தொண்டமான்இருந்தார். அவரிடம் கடிதத்தைக் கையளித்தேன்.

அதன் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளை அறியேன்.

1996ஆம் ஆண்டு மொரிசியஸ் நாட்டுத் துணைப் பிரதமர், எனக்கு அருமை நண்பர் பெரஞ்சே என்னை அழைத்தார். தனது கட்சியின் வெள்ளிவிழா அந்த ஆண்டு நடைபெறுவதாகவும் இலங்கையிலிருந்து தமிழ்த் தலைவர் ஒருவரை அழைக்க விரும்புவதாகவும் என்னிடம் கூறினார்.

அடுத்த வாரம் கொழும்பு செல்ல உள்ளேன். வேறு ஒரு பணிக்காகச் செல்கிறேன். அங்கு உள்ளோரிடம் உசாவிப் பதில் சொல்கிறேன் என அவரிடம் கூறினேன்.

கொழும்பு சென்றேன். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைமை அலுவலகக் கட்டடப் பணிகள் நடந்து கொண்டிருந்ததால் அமைச்சர் தொண்டமான் சிறிய அலுவலகத்தில் இருந்தார். ஆறுமுகம் தொண்டமான் உடனிருந்தார்.

மொரிசியஸ் துணைப் பிரதமரின் செய்தியைக்கூறினேன். போய்வருவீர்களா? எனக்கேட்டேன். நாடு, அங்குள்ள அரசியல் நிலைமை, கட்சியின் கொள்கை, விழாவின் இயல்பு, என என்னிடம் விவரங்கள் கேட்டார்.

அங்கிருந்தே மொரிசியஸ் துணைப் பிரதமருக்கு அழைப்பு எடுத்து இருவரையும் இணைத்தேன்.

கட்சியின் பெயர் Mauritius Militant Movement. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உதவியாளர் ஒருவர் அங்கு இருந்தார். Militant என்ற பெயர் இருப்பதால் அதுவும் விடுதலைப் புலிகள் சார்ந்த அமைப்பாக இருக்குமோ என என்னிடம் வினவினார்.

ஆட்சியில் உள்ள கட்சியினர் அழைக்கிறார்கள் என ஆறுமுகம் தொண்டமான் எடுத்துச் சொன்னார்.

பிரஞ்சே அழைப்பை ஏற்ற தொண்டமான் மொரிசியஸ் சென்றார். வெள்ளி விழாவில் கலந்துகொண்டார். சிங்கப்பூர் வழியாகச் சென்று மீண்டார்.

நேற்று இரவு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் காலமானார் என்ற செய்தி அறிந்ததும் என் கண்கள் பனித்தன. மூத்த தொண்டைமானைப் போலவே இவரும் ஈழத் தமிழர் நலனில் மிக்க ஈடுபாடு உடையவர்.

அவரோடு பழகிய நாள்கள் நெஞ்சில் நினைவு அலைகளாக மோதுகின்றன. இனிமையான பொறுப்பு வாய்ந்த மனித நேயமிக்க ஒருவரை இழந்து வாடும் இல்லத்தார், செந்திலார், சீவகனார், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசார், மலையக மக்கள் யாவருக்கும் என் நெஞ் சார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

# நேற்று உடுவில் விபத்தில் ஒருவர் சாவு; ஒருவர் காயம்

உடுவில், மானிப்பாய் வீதி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை சேர்ந்த சிவகாந்தன் என்ற ஆசிரியரே உயிரிழந்தவராவார்.

விபத்தைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு வந்த மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டமையுடன் படுகாயம் அடைந்த இளைஞரை சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# 200 மி.மீற்றருக்கு மேல் மழைவீழ்ச்சி பதிவாகும்

கொழும்பு, மே 27

இலங்கையைச்சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல்நிலைகாரணமாக நாடு முழுவதும் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை அடுத்த சில நாள்களில் மேலும் அதிகரிக்கக்கூடும்

இன்றைய காலநிலைக்கு அமைவாக விசேடமாக மத்திய, மேல், சப்ரகமுவ, தென் மாகாணங்களில் 200 மி.மீட்டருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டளவியல் திணைக்களம் இந்த காலநிலை தொடர்பாக விடுத்துள்ள இந்த முன்னெச்சரிக்கை நாளை காலை 5.30 செல்லுபடியானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2020 இல் வெளியிடப்பெற்றது.